செய்தி வெளியீடு எண்: 172 நாள்: 6.3.2008

பொது (தேர்தல்கள் - 3)த் துறை

## செய்தி வெளியீடு

ஏப்ரல் மாதம் 2008 ல் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைவதால் ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட கால அட்டவணையை வெளியிட்டுள்ளது:

| | |
|---|---|
| 1) தேர்தல் அறிவிக்கையை வெளியிடும் நாள் மற்றும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான ஆரம்ப நாள் | 08-3-2008 (சனிக் கிழமை) |
| 2) வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | 15-3-2008 (சனிக் கிழமை) |
| 3) வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்யும் நாள் | 17-3-2008 (திங்கட் கிழமை) |
| 4) வேட்பு மனுக்களைத் திரும்ப பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 19-3-2008 (புதன் கிழமை) |
| 5) வாக்குப் பதிவு நாள் (தேவைப்படின்) | 26-3-2008 (புதன் கிழமை) |
| 6) வாக்குப் பதிவு நேரம் | காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை |
| 7) தேர்தல் நடவடிக்கைகள் முடிவுறும் நாள் | 29-3-2008 (சனிக் கிழமை) |

/தபிபா/

2) இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் செயலாளரை தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் துணைச் செயலாளரை உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும் நியமனம் செய்துள்ளது. வேட்பு மனுக்கள் பிற ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அதிகாரியின் முன்போ அல்லது உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரியின் முன்போ, தலைமைச் செயலகத்திலுள்ள அவர்களின் அலுவலகத்தில் 08-3-2008 முதல் 15-3-2008 வரை முற்பகல் 11-00 மணி முதல் பிற்பகல் 3-00 மணி வரை, 1881 ஆம் வருட செலாவணி முறிச் சட்டத்தின் கீழ் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள ஞாயிற்றுக் கிழமை 09-3-2008 ஐத் தவிர, பிற நாட்களில் தாக்கல் செய்யலாம். வாக்குப் பதிவு தேவைப்படின், சட்டமன்ற குழுக்கள் அறையில் 26-3-2008 அன்று நடைபெறும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.